மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No. 157 / 2021**

வா.சா.1 – அப்துல்மஜீத் 10.03.2025

குறுக்கு விசாரணை :-

சபூர்கான்பீவி எனது தகப்பன் வழி பாட்டி ஆவார். சீனிஆபில் என்பவரின் மகள் சபூர்கான்பீவி என்பதற்கு அரசு துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை பொது அதிகார ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். சபூர்கான்பீவியின் திருமண சான்று தாக்கல் செய்யவில்லை. எங்கள் பள்ளிவாசலில் 1923 க்கு பின்பு உள்ள திருமண சான்று மட்டும் தான் உள்ளது. சபூர்கான்பீவியின் இறப்புசான்று தாக்கல் செய்யவில்லை. சீனிஆபில்லின் மகள் தான் சபூர்கான்பீவி என்பதை காட்டுவதற்கு பொதுஅதிகார ஆவணத்தை தவிர வேறு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சபூர்கான்பீவியின் தாயார் பெயர் ஆமின்அம்மாள். சபூர்கான்பீவியின் தாயார் ஆமின்அம்மாள் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 வாரிசு ஜாபிதாவில் சபூர்கான்பீவியின் மகன்கள் அப்துல்ஜலீல் மற்றும் உஸ்மான் அலி ஆகியோரை காட்டவில்லை. அதுபோல ஜெயினுலாபுதீன் என்பவரின் பிள்ளைகள் 8 பேரை சேர்த்துள்ளேன் அவரது மகன்களான சிக்கந்தர்பாட்சா ஷாஜஹான் பரோஸ்கான் ஆகியோரை வா.சா.ஆ.1ல் காட்டவில்லை. மேற்படி சிக்கந்தர்பாட்ஷா இறந்துபோய்விட்டார் என்றால் சரிதான். அவரது 3 மகன்களையும் ஒரு மகளையும் வா.சா.ஆ.1ல் காட்டவில்லை. கதீஜா என்பவர் சீனிஆபிலின் இளைய மகள் ஆவார். கதீஜா திருமணத்திற்கு

முன்பு இறந்துபோனார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் அப்துல்ஜலீல் என்பவரது வாரிசுகளை குறிப்பிட்டுள்ளேன். சீனிஆபில் என்பவருக்கு அப்துல்ஜலீல் என்ற மகன் கிடையாது. சீனிஆபில் ராவுத்தரின் மகள் தான் சபூர்கான்பீவி என்பதற்கான எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை அதனால் தாவா சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. சீனிஆபில் மகளான கதீஜா திருமணமாகி ஒரு பெண் குழந்தையை வாரிசாக விட்டுவிட்டுதான் இறந்து போனார் அதை மறைத்து நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆமீனாஅம்மாளுக்கும் சபூர்கான்பீவிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது 1962 கிரையம் மூலம் பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1962 முதல் அனுபவம் செய்த சொத்தை தற்போது இடித்ததாகவும் இடையூறு செய்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சீனிஆபில்லின் உண்மையான வாரிசு விபரங்கள் தெரியாமல் கதீஜா திருமணத்திற்கு முன்பு இறந்துவிட்டார் என்றும் சம்சுதீன் என்பவர் இறந்துவிட்டார் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது குடும்பத்தினரும் பிரதிவாதிகளும் தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றும் தாவா சொத்தை பிரதிவாதிகள் தான் இன்று வரை தனித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. சபூர்கான் பீவி சீனிஆபில்லின் வாரிசு இல்லை என்பதால் நாங்கள் கோரியுள்ள பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள பரிகாரம்

எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை